**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 07 மார்ச் 2019

Nestlé
Good Food, Good Life

## உங்களுக்குப் பிரியமான நூடில்ஸின் சுவையில் அற்புதமான மாற்றம் - *Maggi* அறிமுகப்படுத்தும் Creamy, Cheesy, Spicy Daiya Cheesy Noodles

அனைவராலும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட, Creamy, Cheesy, Spicy *Maggi* Daiya Cheesy Noodles உற்பத்தியை நெஸ்லே தனது *Maggi* நூடில்ஸ் உற்பத்தி வரிசையின் கீழ் தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது. அற்புதமான சுவை கொண்ட cheddar சீஸ் தூளை இப்புதிய நூடில்ஸ் உற்பத்தி கொண்டுள்ளதுடன், வாயில் உமிழ்நீரை சுரக்கச் செய்யும் சேவரி (Savoury) சுவைக்கு கருமிளகு, வெங்காயம், வெள்ளைப்பூண்டு மற்றும் மிளகாய் போன்ற வாசனைத்திரவியங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. சீஸ் தூள் மற்றும் வாசனைத்திரவியங்களின் அற்புதமான சுவைக்கலவை இந்த பக்கெட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள அதேசமயம், இன்னும் பாற்தன்மை கொண்டதாக ஆக்கும் வகையில், இதனைத் தயாரிக்கும் போது பாலைச் சேர்த்துக்கொள்ளுமாறு *Maggi* பிரியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். அற்புதமான சுவையும், போசணைச் சத்தும் நிரம்பிய *Maggi* Daiya Cheesy Noodles, சுவை நிரம்பிய உணவை விரைவாகவும், இலகுவாகவும் தயாரிக்க விரும்பும் சமயங்களில் அனைத்து குடும்பங்களும் கட்டாயமாக கொண்டிருக்க வேண்டிய ஒரு உற்பத்தியாக மாறியுள்ளது.

*“கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்தும் புத்தாக்கங்களை முன்னெடுத்து வந்துள்ள* Maggi*, புதிய சுவை வடிவங்கள், புதிய வகைகள் மற்றும் புதிய சேர்க்கைப் பொருட்களை அறிமுகப்படுத்தி வந்துள்ளது. காரமான, சீஸ் சேர்க்கப்பட்ட உணவு வகைகள் இளைஞர் மத்தியில் அதிகமாக பிரபலமடைந்து வருவதாக எமது ஆய்வுகள் மூலமாக கண்டறிந்துள்ளோம். இந்த நுண்ணறிவின் மூலமாக எமது நுகர்வோரின் அபிமானத்தை வென்றெடுத்துள்ள* Creamy, Cheesy, Spicy *நூடில்ஸ் உணவை வழங்குவதற்காக, மாத்தளை மாவட்டத்திலிருந்து பெறப்பட்ட மிளகு அடங்கலாக, சீஸ் தூள் மற்றும் வாசனைத்திரவியங்கள் சேர்ந்த நேர்த்தியான உணவு தயாரிப்பினை அறிமுகப்படுத்தியுள்ளோம். இப்புதிய உற்பத்தியானது நாடளாவியரீதியில் அனைத்து விற்பனை நிலையங்களிலும் கிடைக்கப்பெறுவதுடன், அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்த நூடில்ஸ் உணவை சாப்பிட்டுப் பார்க்குமாறு அனைத்து* Maggi *பிரியர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்!”* என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் உணவு உற்பத்தித் துறை பிரதித் தலைமை அதிகாரியான பிரியதர்ஷினி கருணாரட்ன அவர்கள் குறிப்பிட்டார்.

*Maggi* நூடில்ஸ் நலச்செழுமை மிக்க கோதுமை கொண்டு தயாரிக்கப்படுவதுடன், கல்சியம் செழுமை நிரம்பியவை. சுவையை மேம்படுத்தும் வகையில், இலங்கையில் சமையலின் போது உபயோகிக்கப்படுகின்ற விருப்பமும், நம்பிக்கையும் மிக்க பாரம்பரிய வாசனைத் திரவியங்கள் மற்றும் மூலிகைகள் இந்த அற்புதமான சுவை கொண்ட நூடில்ஸ் உற்பத்தி வரிசையை தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படுகின்றன. கொத்தமல்லி, ஏலக்காய், மஞ்சள், சீரகம், மிளகு, ஜாதிக்காய், வெந்தயம், பெருஞ்சீரகம், மிளகாய், வெள்ளைப்பூண்டு, இஞ்சி, இரம்பை மற்றும் கறிவேப்பிலை போன்ற வாசனைத்திரவியங்கள் இந்த உற்பத்தி வரிசையில் அடங்கியுள்ளன. 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் அனைத்து வீடுகளிலும் மிகவும் நேசிக்கப்படுகின்ற ஒரு உற்பத்தியாக *Maggi* நூடில்ஸ் திகழ்ந்து வந்துள்ளது. #MyMaggiMyTaste என்ற வர்த்தகநாம உறுதிமொழியை நிலைநாட்டும் வகையில் இலேசான காரம் முதல் கூடிய காரம் வரை பல்வேறுபட்ட சுவை வடிவங்களில் அதன் உற்பத்திகள் கிடைக்கப்பெறுகின்றன.

---